காவல் துறை

புதுச்சேரி

தேதி 02.08.2011

# பத்திரிகை செய்தி

கடந்த 11.07.2011 அன்று இரவு 10.00 மணிக்கு டேனியல், வயது 36 த/பெ ஜோசப் இளங்கோ, நெ.18.விவேகானந்தர் வீதி, திரு நகர், வேலூர் என்பவர் ரெட்டியார்பாளையம் காவல் நிலையம் வந்து அன்று 11.07.2011 இரவு 8.55 மணியளவில் புதுச்சேரி, 100 அடி ரோட்டில் உள்ள மாடர்ன் பாருக்கு அருகில் அவருக்கு சொந்தமான TN.23.AJ.2472 எண்ணுள்ள இண்டிகா காரில் அமர்ந்து அவரது டிரைவர் மற்றும் நண்பருடன் பேசிக்கொண்டிருந்தபோது, மூன்று அடையாளம் தெரியாத சுமார் 30 வயது மதிக்கதக்க ஆண் நபர்கள் அவரிடம் வந்து, டிரைவரையும், நண்பரையும் தாக்கிவிட்டு, மேற்படி காரில் அவரை வைத்து கடத்தி, காரில் வைத்து அவரையும் கைகளால் தாக்கி கொண்டு திண்டிவனம் பக்கமாக போகும்போது, கோரிமேடு அருகில் இருந்து, போலீஸ் ரோந்து வாகனம் துரத்தியதால், ஆரோவில் டோல்கேட் அருகில் காரையும், அவரையும் விட்டுவிட்டு இறங்கி ஓடிவிட்டார்கள் பின்னர் போலீஸார் வந்து மீட்டுக்கொண்டு வந்ததாக எழுத்து மூலமாக புகார் கொடுத்தார். இதன் பேரில் ரெட்டியார்பளையம் காவல் நிலையத்தில் குற்ற எண்.140/2011 U/s 394 IPC r/w 34 IPC -ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின் புலன் விசாரணையில் கீழ்கண்ட குற்றவாளிகள் ஈடுபட்டிருப்பதாக தகவல் கிடைத்தது. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட குற்றவாளிகளான 1) கார்த்திக் (எ) கார்த்திகேயன்(24) த/பெ அன்பழகன், சீதகுப்பம், கடலூர், 2) சிவபாலன் (23) த/பெ சாமிகண்ணு, 3) ஆனந்தகுமார்(24) த/பெ கோவிந்தன், மற்றும் 4) அப்பு @ வெங்கடேசன்(24) த/பெ ரவிசந்திரன், சின்ன காரைக்காடு, கடலூர் ஆகியோரை 01.08.2011 அன்று ரெட்டியார்பாளையம் போலீசார் கடலூரில் கைது செய்தனர். இவர்களை விசாரணை செய்ததில் தாங்கள் நான்கு பேர்களும் கார் கடத்திய குற்றத்தில் ஈடுபட்டதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்தார்கள். இவர்களுடைய ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்படும். பின்னர் நான்கு பேரையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

***********